மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

141—

போக்குவரத்துப் பணிமனை

***29378—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி போக்குவரத்துப் பணிமனையை விரிவாக்கம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டத்திற்குட்பட்ட எடப்பாடி பணிமனை 18-6-1985 அன்று இடம் பெறப்பட்டு, 1-2-1988 முதல் 72 பேருந்துகளுடனும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடனும் செயல்பட்டு வருகின்றது. 3 ஆண்டுகளில் எடப்பாடி தொகுதி மக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 9 புதிய வழித்தடங்களையும், 6 புதிய பேருந்துகளையும் வழங்கியுள்ளார்கள். பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப பணிமனையை விரிவாக்கம் செய்திடவும், கான்கிரீட் தளம், சுற்றுச்சுவர் அமைக்கவும் ஏற்கெனவே மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் ரூபாய் 61 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று மேற்படி பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

முற்பகல் 10-35

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குல தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எடப்பாடி போக்குவரத்துப் பணிமனைக்குச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கான நிலம் கையகப்படுத்துவது சம்பந்தமான பிரச்சினை ஏற்கெனவே நீதிமன்றத்தில் முடிந்து, போக்குவரத்துக் கழகத்திற்குச் சாதகமாக தீர்ப்பு வந்திருக்கிறது. ஆனால் இதுவரை சுற்றுச்சுவர் கட்டப்படாமல் இருக்கிறது. மேலும் அங்குள்ள தரைத்தளம் மிகவும் பழுதடைந்துள்ளது. மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி பஸ் போக்குவரத்திற்குச் சிரமமாக இருக்கிறது. போக்குவரத்துக் கழகத்திற்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் மூலமாகக் கிடைத்த 40 சென்ட் நிலத்தையும் சேர்த்துப் பணிமனையை விரிவாக்கம் செய்யவும், தரைத்தளத்தைப் பராமரிப்பு செய்யவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று போக்குவரத்துப் பணிமனையை விரிவாக்கம் செய்வதற்கு ரூ.61 இலட்சம் செலவாகும் என்பதையும் இங்கே பதில் கூறுகின்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதனால், விரைவாக அந்தப் பணிகளைச் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று ஆண்டுகளில் மட்டும் பணிமனை மேம்பாட்டிற்காக ரூ.18 கோடியே 64 இலட்சம் நிதியினை ஒதுக்கி, பணிகளைச் செய்வதற்கு உத்தரவிட்டு, அந்தப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற எடப்பாடிப் பணிமனை*

விரிவாக்கப் பணிக்காக ரூ. 61 இலட்சம் அளவில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. பணிமனை விரிவாக்கம் மட்டுமல்ல, சுற்றுச்சுவர், கான்கிரீட் தளம் அமைக்கும் பணிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று மேற்படி பணிமனைக்கு டெண்டர் விடப்பட்டு அந்தப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக அந்தப் பணிகளை முடித்துக்கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பணிமனையின் சுற்றுச்சுவர் மற்றும் தரைத்தளம் ஆகியவற்றை சரி செய்து கொடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதி நகர், முல்லை நகரில் இருக்கக்கூடிய ஒரு பேருந்து நிலையம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. சமூக விரோதிகள் பயன்படுத்துகிற இடமாக அது மாறிப்போனது. ஆகவே இந்தப் பிரச்சினையை சட்டமன்றப் பேரவையில் எழுப்பிய பிறகு, அப்பேருந்து நிலையத்தைப் புதுப்பிக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். நானும் ரூ.30 இலட்சம் நிதியினை அந்தப் பணிக்காகக் கொடுத்திருக்கிறேன். அந்த வேலை தொடங்கப்பட்டு, அப்படியே நிற்கிறது. மகாகவி பாரதி நகர் மார்க்கெட் பகுதியிலே பேருந்துகள் நிறுத்தப்படுவதால் மிகப் பெரிய இடையூறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் பேருந்து நிலையத்தை விரைவில் புனரமைத்து, பேருந்துகள் நிறுத்தப்பட்டு பழுதுபார்க்கும்

2014 ஜூலை 15]

பணியையும் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்து, பேருந்துகள் சாலையில் நிற்பதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, மகாகவி பாரதி நகர் பணிமனைக்கு 1.37 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.80 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. M. Shed மற்றும் நிருவாகக் கட்டடம் கட்டும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. விரைவாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அந்தப் பணிமனை திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

142—

நடமாடும் கால்நடை மருந்தகம்

***5741—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு சட்டமன்றத் தொகுதியிலே ஒரு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவைத் தொடங்க